தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Tamilmanam International Research Journal of Tamil Studies
*An Internationally Peer-Reviewed, Open Access Monthly Journal*
*eISSN: 3049-0723*
*Vol. 2 Issue: 01 August 2025*

# தொல்காப்பிய யாப்பியலும் வழுவமைதியும்

# Prosodic structure of Tolkappiyam and Deviation

**ஸ்ரீ. மணிகண்டன், முனைவர் க. ஜவகர்****
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகம், திருவாரூர்
**நெறியாளர் & உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகம், திருவாரூர்.
Email: manikandansri97@gmail.com

**S. Manikandan, Dr. K. Jawahar**,**
Research Scholar, Dept. of Tamil, Central University of Tamil Nadu, Thiruvarur
Research Supervisor & Assistant Professor, Dept. of Tamil, Central University of Tamil Nadu, Thiruvarur

**Abstract:**

Prosody is the external form of the poetry or literature. This structure operates at various levels depends upon the content as well as the types of poem. In this context, The prosodic structure functions as the various flexible and deviant positions. Hence, the prosodic structure of Tolkappiyam includes Eluttu (Phoneme), Acai (the metrical syllable), Cir (foot). All these elements will be formed in Ati (the metrical line) based content of the poem. In this regard, In the prosodic concept of Tolkappiyam, the rhythm and content are integrated flexibly. In this regard, the article focuses on the study of the prosodic structure of deviation in Tolkappiyam.

**Key Words:** Tolkappiyam, Deviation, Prosodic structure, Prosodic concept

**ஆய்வுச் சுருக்கம்**

யாப்பியல் என்பது ஒரு கவிதை அல்லது இலக்கியத்தின் புறவடிவத்தைக் குறிக்கும். இந்தப் புறவடிவம் பொருண்மைக்கும் பாவடிவத்திற்கும் ஏற்ப தனித்துவமாக வேறுபட்டு அமைகிறது. அதைப்போலவே ஒவ்வொரு பாவுக்குமுரிய யாப்பமைப்பானது மாறாத வழாநிலைத் தன்மையில் இல்லை. அவை நெகிழ்வுடன் கூடியதாக வழுவமைதித் தன்மையுடையதாக அமைகிறது. அந்த வகையில் தொல்காப்பிய யாப்பியல் எழுத்து, அசை, சீர் முதலிய உறுப்புகளை உள்ளடக்கிய அடியின் பொருள்தளத்தை நோக்கியதாக அமைகிறது. இந்நிலையில் தொல்காப்பியத்தின் யாப்பிசையும் உள்ளடக்கமும் இணைந்ததாக நெகிழ்வுத் தன்மையுடையதாக அமைகின்றன. இவ்வாறு தொல்காப்பியத்தின் யாப்பியல் வழுவமைதிக் கூறுகளை முதன்மைப்படுத்தும் நோக்கில் இக்கட்டுரை அமைகிறது.

**குறிச்சொற்கள்:** தொல்காப்பியம், வழுவமைதி, யாப்பியல் அமைப்பு, யாப்பியல் கோட்பாடு

## முன்னுரை

தொல்காப்பியம் தமிழ் அறிவு மரபின் முதன்மையான நூலாகத் திகழ்கிறது. தமிழ் மொழியமைப்பையும் இலக்கிய ஆக்கமுறையையும் அவற்றின் இயல்பான தன்மையில் இருந்து அணுகக்கூடிய நிலையில் நெகிழ்வுடன் கூடியதாக அமைகிறது. இவ்வாறான நிலையில் தொல்காப்பியத்தின் பகுப்பாய்வு முறையியல் என்பது விதிகளை முதன்மைப்படுத்துவது என்பதை

விடவும் நடைமுறைக்கும் நெகிழ்வுக்கும் முதன்மை தருவதாக அமைவது சிறப்புக்குரியதாக அமைகிறது. இத்தகைய பார்வையின் இயங்கியல் தன்மையோடு அணுகுவதை, வேற்றுமை – வேற்றுமை மயங்கியல், புள்ளிமயங்கியல், எச்சவியல், உரியியல், பொருளியல் முதலிய இயற்பொருண்மைகளும் புறனடைகளும்; ஆகுபெயர், விரவுப்பெயர், குறிப்புவினை, வினையெச்ச வடிவங்களின் பல்வேறு சாத்தியப்பாடுகள், பலபொருளொருசொல், திணைமயக்கம் போன்ற பல்வேறு கூறுகளும் முதன்மைப்படுத்துகின்றன. அந்த வகையில் தொல்காப்பிய யாப்பியல் நோக்கு நெகிழ்வுத் தன்மையுடையதாக அமைந்துள்ளது என்று கூறமுடியும். அதாவது தொல்காப்பியம் விதிமுறைகள் என்று கூறும் அதேநேரத்தில் நெகிழ்வுகளை உள்ளடக்கிக் காண்கிறது. இந்தப் பார்வை தொல்காப்பிய யாப்பியல் நோக்கை நெகிழ்வுடையதாக்குகிறது. ஒவ்வொரு பாவுக்குமுரிய விதிகள் என்பனவற்றை முதன்மைப்படுத்துவதோடு அவற்றின் நெகிழ்வுகளையும் உள்ளடக்கிக் கூறுகிறது. இவ்வாறான தொல்காப்பியத்தின் யாப்பியல் நெகிழ்வு வடிவங்களைத் தொல்காப்பிய யாப்பியல் வழுவமைதிக் கூறுகளாகக் காணவியலும். இந்த வகையில் தொல்காப்பிய யாப்பியலின் நெகிழ்வுத் தன்மையுடைய வழுவமைதிக் கூறுகளை முதன்மைப்படுத்துவதாக இந்தக் கட்டுரை அமைகிறது.

**யாப்பியலும் வழுவமைதியும்**

“தொல்காப்பியத்தில் யாப்பு எனும் சொல் செய்யுள் என்ற பொருளிலும் வழங்கக் காணலாம். ஆதலின் செய்யுளின் இலக்கணத்தை யாப்பிலக்கணம் என்ற பெயரினால் கூறும் மரபும் தோன்றியது”[1]. எனவே யாப்பு என்பது இலக்கிய வடிவம் அல்லது புறக்கட்டமைப்பைக் குறிக்கிறது என்பது பொதுநிலைப் பார்வையாகும். ஆனால் தொல்காப்பியம் வடிவத்தையும் உள்ளடக்கத்தையும் இணைத்தே யாப்பு என்பதை அணுகியுள்ளது.

**“எழுத்து முதலா ஈண்டிய அடியிற்**
**குறித்த பொருளை முடிய நாட்டல்**
**யாப்பென மொழிப யாப்பறி புலவர்”[2]**

என்று எழுத்து அசை, சீர், அடி ஆகிய மூன்று உறுப்புகளும் அடியின்கண் குறித்த பொருளை நாட்டலை யாப்பெனக் கூறுகிறது. இங்கு முக்கியமாகத் தொல்காப்பியம் குறிப்பிடுவது ‘குறித்த பொருளை முடிய நாட்டல்’ என்பதாகும். அதாவது உள்ளடக்கமும் வடிவமும் இணைந்த பண்பையே யாப்பு என்று கூறுகிறது. உள்ளடக்கத்தைச் சொல்வதற்காகவே வடிவமாகிய யாப்பு இருக்கிறது என்கிறது. இந்த வகையில் தொல்காப்பிய யாப்பியல் பார்வை என்பது வடிவ உள்ளடக்க இணைவைக் காட்டுகிறது. தி.வே. கோபாலையரும், “எழுத்து முதலாக அசையும் சீரும் ஒன்றாகத் தொடர்ந்து அமைந்த அடியிலே, தான் குறிப்பிடக் கருதிய பொருளைப் பிறிதோர் அடியும் கொண்டுகூட்டிப் பொருள் செய்யாமல், அவ்வப் பொருள் அவ்வவ் வடியிலேயே முற்றுப் பெறுமாறு செய்தல்”[3] என்கிறார். யாப்பருங்கலம்,

**“எழுத்தசை சீர்தளை யடிதொடை தூக்கொடு**
**இழுக்கா நடைய தியாப்பெனப் படுமே”[4]**

என்று எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை, தூக்கு ஆகிய ஏழு உறுப்புகளை உடையதாகக் குறிப்பிடுகிறது. தொல்காப்பியம் போல உள்ளடக்கத்தையும் இணைத்து யாப்பருங்கலம் கூறவில்லை.

தொல்காப்பியம் எழுத்து, அசை, சீர் ஆகிய மூன்று உறுப்புகளையும் உள்ளடக்கிய அடியின் பொருள்தளத்தை யாப்பென்கிறது. இத்துடன்,

**“பாட்டுரை நூலே வாய்மொழி பிசியே**

**அங்கதம் முதுசொல் அவ்வேழ் நிலத்தும்**

**வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்**

**நாற்பே ரெல்லை அகத்தவர் வழங்கும்**

**யாப்பின் வழிய தென்மனார் புலவர்”[5]**

என்று ‘பாட்டு, உரை, நூல், வாய்மொழி, பிசி, அங்கதம், முதுசொல்’ ஆகியனவும் யாப்பின் பகுதியாகக் காணவேண்டுமென்கிறது. இங்கு முதன்மையாகக் கவனிக்க வேண்டியது,

**“எழுநிலத் தெழுந்த செய்யுள் தெரியின்**

**அடிவரை யில்லன ஆறென மொழிப”[6]**

என்று பாட்டைத் தவிர்த்த பிற அடி வரையல்லாதன என்கிறது தொல்காப்பியம். அதாவது பாட்டு யாப்பு அடிவரையறையுடையதென்றும் பிற, ‘உரையாப்பு, நூலியாப்பு முதலிய ஆறும் அடிவரையற்ற யாப்பு வடிவங்கள் என்கிறது. இங்கு கவனிக்க வேண்டிய ஒன்று தொல்காப்பியம் யாப்பு என்கிற வடிவக்கூறை அடிவரையறை உடைய ஆசிரியப்பாட்டு, வெண்பாப்பாட்டு, கலிப்பாட்டு, வஞ்சிப்பாட்டு ஆகியனவற்றை ஒரு தொகுதியாகவும் அடிவரையறை அல்லாததை இன்னொரு தொகுதியாகவும் கூறுகிறது. இவற்றுள்ளும் கலிப்பா உறுப்புகளினால் பெயர் பெற்ற தனியொரு வடிவமாக உள்ளதையும் குறிப்பிடுகிறது. இன்னொரு முக்கியமான கூறு விதிமுறைகளை வழாநிலையாகப் பின்பற்றும் கட்டளை யாப்பு வடிவத்தையும் ஆசிரியம், வெண்பா, வஞ்சி வடிவங்களுக்குக் கூறுகிறது. எனவே வழாநிலையாகிய விதிமுறை வடிவங்களைப் பின்பற்றும் யாப்பு வடிவங்கள் கட்டளை வடிவங்களாகவும் அதனின்று விதிமுறைகளுக்கு உட்பட்டும் நெகிழ்வும் கூடிய வழாநிலை+வழுவமைதித் தன்மையுடைய சீர்யாப்பு வடிவங்களை இரண்டாம் நிலையிலும் அடிவரையறையற்ற சுதந்திரத் தன்மையுடைய வழுவமைதி யாப்பு வடிவங்களை மூன்றாம் நிலையிலும் தொல்காப்பியம் முன்வைப்பதைக் காணமுடியும். இங்கு தொல்காப்பியத்தின் யாப்பியல் பார்வை வழாநிலைக்கு முதன்மை தருவதிலிருந்து வாழாநிலையும் வழுவமைதியுமாகவும், வழுவமைதியே முதன்மைத் தன்மையுடையதுமாகவும் இருக்கும் இரண்டாம் நிலைக்கே அதிக முக்கியத்துவம் கொடுத்து அமைந்துள்ளதைக் காணமுடியும். அந்த வகையில் தொல்காப்பியத்தின் யாப்பியல் கருத்தாக்கம் வழாநிலையாகிய விதிகளுக்கு முதன்மை தருவதிலிருந்து வழுவமைதிக் கூறுகளுக்கு முதன்மை தரும் நிலையில் அமைந்துள்ளதைச் செய்யுளியலின் அமைப்புத் தருக்கமுறை காட்டுகிறது என்று கூறமுடியும்.

அத்துடன் தொல்காப்பிய யாப்பியல் அமைப்பு, வாய்மொழி, பிசி, அங்கதம், முதுசொல் முதலிய வழக்கு வழிப்பட்ட உலகியல் மரபுகளையும் உள்ளடக்கிக் கூறுகிறது. அதாவது எழுத்து அல்லது செம்மையான செய்யுள் மரபுதான் உயர்ந்தது என்ற தன்மையை மட்டும் முதன்மைப்படுத்தாமல் வாய்மொழி மரபுகளையும் செய்யுள் மரபாகக் காணும் உள்ளடங்கிய தன்மை தொல்காப்பியத்தின் சிறப்பிற்குச் சான்றாகும். அந்த வகையில் யாப்பியல் என்ற முறைப்படுத்தப்பட்ட வழாநிலை மேல்நிலையாக்க மரபுகள் கட்டளை யாப்பு போன்ற ஒருதளத்தில் இருந்தாலும் அவற்றின் நெகிழ்வு வடிவங்களும் இயல்பு வடிவங்களும் முதன்மையானவை என்ற நிலையில் தொல்காப்பிய யாப்பியல் நோக்கு வழுவமைதித் தன்மையுடன் உள்ளடங்கிய இயல்பான தளத்தில் அமைந்துள்ளது சிறப்பிற்குரியதாகும். அதாவது யாப்பிசையும் உள்ளடக்கமும் ஒருங்கிணைந்து அமையவேண்டும் என்பதே தொல்காப்பியத்தின் மையநோக்கம். அந்த நோக்கத்திற்கு ஊறு வராத வகையில் யாப்பியலின் அசை, சீர், அடி முதலிய உறுப்புகள் நெகிழ்வுடன் அமையலாம். இதில் எவ்விதப் புலமைக்

கட்டுப்பாடுகளும் இடம்பெற வேண்டியதில்லை என்பது தொல்காப்பியத்தின் உயரிய நோக்காக இருக்கிறது.

**யாப்பியல் உறுப்புகளும் பாவும் வழுவமைதியும்**

தொல்காப்பியம் யாப்பியலின் உறுப்புகளாக எழுத்து, அசை, சீர் ஆகிய மூன்றையும் உள்ளடக்கிய அடியின் பொருண்மைத்தளத்தைக் கூறுகிறது.

**எழுத்தும் அசையும்**

யாப்பியல் உறுப்புகளில் எழுத்தும் அசையும் அடிப்படையானவைகளாக இருக்கின்றன. அசையில், உயிரில்லாத எழுத்துக்கள் கணக்கில் கொள்ளப்படாது[7] என்ற வழாநிலைப் பொருண்மை கட்டளை யாப்பில் உண்டு. ஆனால் சீர்யாப்பில் உயிருடைய எழுத்துக்கள், அதாவது அளபெடை வடிவங்கள் அசைநிலையாகக் கொண்டும் கொள்ளாமலுமாகிய இருநிலைகள் இருக்கின்றன. 'அளபெடை அசைநிலை ஆகலும் உரித்தே'[8] என்பதன் மூலம் அளபெடைகள் அசைநிலையாக ஆகாமை பெரும்பான்மை என்ற வாழாநிலையைத் தொல்காப்பியம் முதன்மைப்படுத்துகிறது. ஆகக்கூடிய நிலைமைகள் செய்யுளிசை அளபெடையில் வரும் என்று வழுவமைக்கிறது. இதைப்போலவே ஒற்றெழுத்துக்களும் அசைநிலையாகக் கணக்கில் கொள்ளப்படும் என்று ஒற்றளபெடையையும்[9] வழுவமைதியாக்குகிறது. அத்துடன் உரியசையாகக் குற்றுகர முற்றுகரங்களும் அளவிடப்படுகின்றன. இவ்வாறு தொல்காப்பியம் எழுத்தியல் விதிமுறைகளைக் கட்டளை யாப்பில் வலியுறுத்தினும் சீர்யாப்பில் யாப்பின் இசையும் பொருண்மையும் முதன்மை என்ற நிலையில் நெகிழ்வுடன் அமைகிறது. எனவே இங்கு எழுத்தியல் அமைப்பு வழுவமைதித் தன்மையுடையனவாய் இருக்கின்றன. அசைகள் சீர்நிலை பெறுதல் இல்லை என்பது வழாநிலையாகும். ஆனால்,

**"இசைநிலை நிறைய நிற்குவ தாயின்**
**அசைநிலை வரையார் சீர்நிலை பெறலே"**[10]

என்று யாப்பிசைத் தன்மைக்கு முதன்மை தரும்நிலையில் அசைகள் சீர்தன்மையாக வரலாம் என்கிறது தொல்காப்பியம். இதற்கு வெண்பாவின் ஈற்றசையாகிய ஓரசைச் சீர்களைக் குறிப்பிடலாம். எனவே இங்கு எழுத்துக்களும் அசைகளும் யாப்பிசையின் பொருட்டு நெகிழ்வுடையனவாக அமைதல் இயல்பு என்பதைத் தொல்காப்பியம் கூறுகிறது.

**சீரும் பாவும்**

சீர்கள் என்பவை அசைகளின் இணைவாக அமைகின்றன. ஒவ்வொரு பாவுக்கும் உரிய சீரமைதிகள் தொல்காப்பியத்தால் பொதுவழாநிலைகளாகச் சொல்லப்படுகின்றன. அதோடு அவற்றின் நெகிழ்வுகளையும் குறிப்பிடுகிறது.

**ஆசிரியப்பாவின் சீர் வழுவமைதி**

உரியசையின் மயக்கமாகிய ஆசிரியப்பாவுக்கு உரிய சீர்கள் ஆறு. நேர்பு நேர்பு, நேர்பு நிரைபு, நிரைபு நிரைபு, நிரைபு நேர்பு மற்றும் நேர்பு நிரை, நிரைபு நிரை ஆகியன. இவற்றில் முதல் நான்கும் முதன்மையானது. பின்னுள்ள இரண்டும் இரண்டாம் நிலையில் இணைத்துக் கொள்ளவும்படும் என்று சேர்க்கப்படுகின்றன. எனவே இங்கு முதன்மையான ஆறுசீர்கள் சொல்லப்படுகின்றன. இயற்சீர் பத்தும் வரலாம் என்று சொல்லப்படுகிறது. இங்கே முக்கியமான வழுவமைதியாக வருவது, 'வெண்சீர் வரையார்

ஆசிரிய அடிக்கே'[11] என்பதே. ஆசிரியப்பாவின் இனிய ஓசையோடு பொருந்திவரின் வெண்சீராகிய காய்ச்சீரும் வரலாம் என்கிறது தொல்காப்பியம். அத்துடன், 'வஞ்சியுரிச்சீரும் ஒரோவழி வரலாம்'[12] என்கிறது. இவ்வாறு சீரமைப்புகளைக் குறிப்பிடுகிறது. தளையில், இயற்சீர் வெண்டளையும் ஆசிரியப்பாவில் வரலாம்[13], இயற்சீர் வெண்டளையும் ஆசிரியத்தளையும் விரவியும் ஆசிரியப்பாவில் வரலாம் என்கிறது. எனவே ஆசிரியப்பாவுக்குரிய ஆசிரிய உரிச்சீர்களன்றி, இயற்சீரும், வெண்சீரும், தளையுள் இயற்சீர் வெண்டளையும் ஆகிய வடிவங்கள் வழுவமைதிகளாக ஏற்கப்படுகின்றன.

**வஞ்சிப்பாவும் பிற பாக்களின் சீர்வழுவமைதிகளும்**

வஞ்சிப்பாவிற்குரிய அறுபது வஞ்சிச்சீர்களின் அமைதியானது, 'தன்பாவில் அல்லாது பிறபாக்களில் வருதல் இல்லை'[14] என்ற சீர்வழாநிலை விதி இருக்கிறது. ஆனால் ஆசிரியப்பாவிலும் சில வேளைகளில் வரலாம் என்கிறது. அதைப்போலவே,

**"வஞ்சி மருங்கி னெஞ்சிய உரிய"**[15]

என்பதன் மூலம் ஆசிரிய உரிச்சீரும் வெண்சீரும் வஞ்சிப்பாவில் வரலாம் என்கிறது. இவ்வாறு வஞ்சிப்பாவின் சீரமைப்பும் நெகிழ்வுடையதாக வழுவமைதித் தன்மையுடையதாக இருக்கிறது. வெண்பாவிற்கு வெண்சீர் முதன்மையானது. இயற்சீரும் வரலாம் என்பது நெகிழ்வாகிறது. கலிப்பாவைப் பொறுத்தவரையில் இயற்சீரும் வெண்சீருமாய் அமைகிறது. தொல்காப்பியத்தின் சீரமைப்பின் நெகிழ்வுகள் என்பன ஒவ்வொரு பாவுக்குமான யாப்பிசைக்கு ஊறு விளைவிக்காத முறையில் பிற சீர்கள் விரவி வரலாம். அவ்வாறு வருவது வழுவமைதியாக ஏற்கப்படும் என்பது முதன்மையாகிறது.

**அடியும் பாவும்**

தொல்காப்பியம் ஒவ்வொரு பாவுக்குமான அடியின் அமைப்பைப் பொதுவாக, வழாநிலையாக முன்வைக்கிறது. பின்பு அவற்றின் வழுவமைதி வடிவங்களையும் கூறுகிறது. ஆசிரியப்பவிற்கு,

**"ஈற்றய லடியே ஆசிரிய மருங்கில்**
**தோற்ற முச்சீர்த் தாகு மென்ப"**[16]

ஈற்றயலடி மூன்று சீர்களைக் கொண்டு அமையும் என்கிறது. ஆனால் அடுத்த நூற்பாவே,

**"இடையும் வரையார் தொடையுணர்ந் தோரே"**[17]

என்று இடையிலும் நான்கு சீர்களாக அல்லாது முச்சீராகவும் குறைந்து வரலாம் என்கிறது. இதற்கு உரையாசிரியர்கள் இருசீர் ஆசிரிய வடியையும் புறநானூற்றில் இருந்து மேற்கோளாகக் காட்டுவர். எனவே ஆசிரியப்பாவின் அடிக்குரிய பொதுச்சீர் வாழாநிலைகள் முன்வைக்கப்பட்டாலும் அவற்றின் நெகிழ்வுகளைத் தொல்காப்பியம் உள்ளடக்கிக் கூறுகிறது. ஏனெனில் இங்கே உள்ளடக்கமும் யாப்பிசையும் முதன்மையானதாகத் தொல்காப்பியம் கருதுகிறது.

வஞ்சியடி இருசீரடியாக அமையும் என்பது பொதுவழாநிலையாகிறது. ஆனால் 'முச்சீரானும் வருமிட னுடைத்தே'[18] என்கிறது. கலிப்பாவில் ஒத்தாழிசைக் கலியில் சுரிதகமானது, ஆசிரியப்பாவின் முடிபாக அமையும்[19] என்கிறது. ஆனால் அடுத்த நூற்பாவே, 'வெண்பா இயலினும் பண்புற முடியும்'[20] எனக் கூறுகிறது.

இவ்வாறு பாவின் அமைப்பில் அடிகளின் நெகிழ்வுகளைத் தொல்காப்பியம் கூறுகிறது. ஆசிரியப்பா, வெண்பா முதலியன பெரும்பான்மை ஒருகூற்றுத் தன்மையுடைய தனிநிலை யாப்பாக

அமைந்துள்ளன. கலிப்பாவின் வடிவம் உறுப்புகளாலும் (ஒத்தாழிசைக்கலி, கொச்சகக்கலி) பாவமைப்பாலும் (கலிவெண்பாட்டு) சொல்லல் முறைகளாலும் (உறழ்கலி – கூற்றும் மாற்றமுமாய் அமைவது) பல தன்மையுடைய நெகிழ்வான பாவகையாக அமைந்துள்ளது. மருட்பா வெண்பாவும் ஆசிரியமுமாகக் கலந்த நெகிழ்வான வடிவமாகிறது. இந்தப் பாவகைகளின் நெகிழ்வு வடிவங்களில் இருந்து இன்னும் நெகிழ்வுத் தன்மையுடையது பரிபாட்டு. 'கொச்சகம், அராகம், சுரிதகம், எருத்து' ஆகிய நான்கு உறுப்புகளைப் பெற்று அமையினும் அதன் அமைப்பானது,

**"இதுபா வென்னும் இயனெறி யின்றி**

**பொதுவாய் நிற்றற்கும் உரித்தென மொழிப"[21]**

என்று எல்லாப் பாவுக்கும் பொதுவாய் இருக்கிறது. இந்தப் பண்பை உணர்ந்தே இளம்பூரணர், 'பரிபாட்டாவது பரிந்த பாட்டாம்'[22] என்கிறார். அதாவது பலவுறுப்புகளைச் சுமந்துவரும் பாட்டு. இங்கு முக்கியமாகக் கவனிக்க வேண்டியது. பரிபாட்டு பொதுநிலைக் கூறுகளைத் தன்னகத்தே கொண்ட நெகிழ்வுத் தன்மையில் தனித்தன்மையுடையதாக அமைகிறது. எனவே தொல்காப்பியத்தின் பாவடிவங்கள் குறித்த பார்வை, வழாநிலை விதிகளை முதன்மைப்படுத்துவதைவிடவும் நெகிழ்வு வடிவங்களால் யாப்பிசையும் உள்ளடக்கமும் இணைந்து உயிர்ப்புள்ள கவிதையாக அமைவதில் மேலதிகக் கவனம் செலுத்துகிறது என்பதை அறியமுடிகிறது.

**முடிவுரை**

தொல்காப்பிய யாப்பியல் நோக்கு என்பது எழுத்து, அசை, சீர், அடி முதலிய நிலைகளில் ஒவ்வொரு பாவிற்குரிய வழாநிலை விதிகளை முதன்மைப்படுத்தவில்லை. கட்டளையாப்பில் அவற்றைக் கூறினாலும் சீர்யாப்பில் அவற்றின் நெகிழ்வுகள் வழுவமைதி வடிவங்களாக, இயல்பானவைகளாக அமைந்து, அவையே கவிதையின் யாப்பிசை, உள்ளடக்கக் கூறுகளை இணைத்துச் செல்லும் உயிர்ப்புள்ளதாக மாற்றுகின்றன என்பதில் தெளிந்த பார்வையைக் கொண்டிருக்கிறது. இவ்வாறான போக்கு பிற்கால யாப்பிலக்கண நூல்களில் முதன்மையாக்கம் பெறவில்லை என்று கூறவியலும். அந்த வகையில் தொல்காப்பிய யாப்பியல் இயல்பான கவிதையின் இசை மற்றும் உள்ளடக்கத்துக்கு அழுத்தம் தரும் வகையில் நெகிழ்வுகளுடன் கூடியதாக வழுவமைதித் தன்மையுடையதாக அமைந்துள்ளது. சங்கப் பாடல்களின் மிக இயல்பான நெகிழ்வான யாப்பியல் வடிவங்கள் தொல்காப்பியத்தின் நெகிழ்வான யாப்பியல் பார்வைக்குச் சான்றாக அமைகின்றன. தொல்காப்பியத்தின் யாப்பியல் விளக்க ஆய்வு முறையியலும் உரையாசிரியர்கள் ஒப்பீட்டு ஆய்வு முறைகளும் இதனை மேலும் உறுதி செய்கின்றன. அந்த வகையில் தொல்காப்பியத்தின் யாப்பியல் பார்வை நெகிழ்வான யாப்பியல் வழுவமைதிக் கூறுகளைக் கொண்டு கவிதையின் வடிவ+உள்ளடக்க இணைவின் அழகியலை ஒருங்கிணைத்துக் காண்கிறது என்று உறுதியாகக் கூறவியலும்.

**சான்றெண் விளக்கம்**


1. கந்தசாமி. சோ. ந. தமிழ் யாப்பியலின் தோற்றமும் வளர்ச்சியும் (முதற்பாகம் - முதற்பகுதி) ப. 81
2. தொல்காப்பியம்.செய்யுளியல்.நூற்பா.74
3. கோபாலையர்.தி.வே., இலக்கணப் பேரகராதி, பொருள்- யாப்பு 2, ப.151
4. யாப்பருங்கலம்.நூற்பா.1
5. தொல்காப்பியம்.செய்யுளியல்.நூற்பா.75

6. மேலது.,157
7. மேலது., 42
8. மேலது., 16
9. மேலது., 17
10. மேலது., 26
11. மேலது., 29
12. மேலது., 30
13. மேலது., 59
14. மேலது., 20
15. மேலது., 21
16. மேலது., 65
17. மேலது., 66
18. மேலது., 45
19. மேலது., 72
20. மேலது., 73
21. மேலது., 206
22. தொல்காப்பியம்.செய்யுளியல்.நூற்பா.204 இளம்பூரணர் உரை

**துணையன்கள்**


1. கந்தசாமி. சோ. ந. தமிழ் யாப்பியலின் தோற்றமும் வளர்ச்சியும் (முதற்பாகம் – முதற்பகுதி, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர். 1989.
2. கோபாலையர்.தி.வே., தமிழ் இலக்கணப் பேரகராதி (15), பொருள்-யாப்பு-2, தமிழ்மண் பதிப்பகம், சென்னை:2005
3. வெள்ளை வாரணன்.க., தொல்காப்பியம் செய்யுளியல் உரைவளம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை:1989
4. வேணுகோபாலப்பிள்ளை.மே.வீ (பதிப்பாசிரியர்)., அமிதசாகரனார் இயற்றிய யாப்பருங்கலம் - பழைய விருத்தியுரையுடன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை: 1998


**References**


1. Gobalaiyar.Thi.Ve., Tamil Ilakkana Perakarathi (15). Porul – Yappu – 2, Tamilman Pathippakam, Chennai:2005
2. Kandhasamy.S.N., Tamil Yappiyalin Thotramum Valarchiyum (First Part, Volume 1), Tamil University, Thanjavur:1989
3. Vellai Varanan.Ka., Tolkappiyam Seyyuliyal Uraivalam, Madurai Kamaraj University, Madurai:1989
4. Venugobalappillai.Me.Vi., Amithasakaranar iyatriya Yapparungalam – Palaiya viruthiyuraiyudam, International Institute of Tamil Studies, Chennai:1998



License

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

Our journal adopts CC BY License Creative Commons Attribution 4.0 International License http://Creativecommons.org//license/by/4.0/ . It allows using, reusing, distributing and reproducing of the original work with proper citation.